காலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 21 செவ்வாய்க்கிழமை 06.08.2024 | அதிர்வு 004

## இந்திய மீனவர்கள் 22 பேர் நேற்று கைது

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் நேற்று இரவு 04

# தமிழ்ப் பொது வேட்பாளர் அறிவிப்பில் இழுபறி நிலை

## நேற்றைய கூட்டம் முடிவின்றி கலைந்தது





(எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவில் இழுபறி நிலை தொடர்கின்றது.

இதற்காக ஏழு அரசியல் கட்சிகளும், ஏழு சிவில் சமூக அமைப்புகளும் யாழ்ப்பாணத்தில் நேற்று மதியம் ஒன்றுகூடி பேச்சு நடத்தின.

முன்னதாக இடம்பெற்ற பேச்சுளின் போது, தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறக்குவதற்காகப் பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்ட நிலையில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், கே.வி. தவராசா (ஜனாதிபதி சட்டத்தரணி) ஆகியோரின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டன. 04


## மொட்டுவில் இருந்து ஊழல்வாதிகள் விலகியமை வரவேற்கத்தக்க விடயம்

### இப்படிக் கூறுகின்றார் உதயங்க

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஊழல்வாதிகள் விலகியமை வரவேற்கத்தக்க விடயம் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இன்னும் 50 நாட்களில் நாடாளுமன்றத்தைக் கலைக்க பெரும்பாலும் வாய்ப்புள்ளது என்றும் இதன்போது அவர் மேலும் கூறினார்.





மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்துள்ள தனிநபர் சட்டமூலம் இன்று காலை இரண்டாவது வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இந்தச் சட்டம் மூலம் இன்றே நிறைவேற்றப்படுமா எனக் கேள்வி எழுப்பி, ஐயத்துடன் சில விடயங்களை நேற்று முன்வைத்திருந்தேன்.

அந்த விடயங்களை வாசித்து விட்டு நாடாளுமன்ற விவகாரங்களோடு அதிகம் பரிச்சயம் உள்ள சிரேஷ்ட பிரஜை ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்து விளக்கினார்.

“இது மற்ற சட்டமூலங்கள் போல இரண்டாவது வாசிப்பை அடுத்து குழு நிலை விவாதத்துக்குப் போகாது. இது அரசு சமர்ப்பித்த சட்டமூலம் அல்ல. தனிநபர் பிரேரணையாக 04



# மெனிக்திவெல மத்திய கல்லூரி மாணவர்களின் கோரிக்கையினை ஜனாதிபதி நிறைவேற்றினார்

தமது பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறையொன்றைப் பெற்றுத் தருமாறும் விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்துமாறும் கண்டி, மெனிக்திவெல மத்திய கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, துறைமுக நகரம், மத்திய வங்கி, நாடாளுமன்றம் உள்ளிட்ட கொழும்பைச் சுற்றியுள்ள கல்வியுடன் முக்கிய தொடர்புள்ள விசேட இடங்களை பார்வையிடும் வாய்ப்பு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மெனிக்திவெல மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் சுமார் 570 மாணவர்கள் நேற்று களப்பயணத்தில் இணைந்திருந்தமையோடு அவர்களுக்கு ஜனாதிபதி மாளிகையை பார்வையிடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்தமையோடு தங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க வாய்ப்பளிக்குமாறு கோரினர்.

கடுமையான வேலைப் பழு இருந்த போதும் மாணவர்களைப் புறக்கணிக்காமல் அவர்களைச் சந்தித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியமையுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஸ்மார்ட் வகுப்பறையொன்றை தமது பாடசாலைக்கு வழங்குமாறும், விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்துமாறும் மாணவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அதற்கான பணிகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இராணுவத்தினரின் பங்களிப்புடன் கல்லூரியின் மைதானத்தை நவீனமயப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கல்லூரியில் விளையாட்டுத் துறையில் திறமை செலுத்தும் சிறார்களையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார். பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாணவர்களுடன் குழுப் படம் எடுத்துக் கொண்டார்.

இதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவையும் மாணவர்கள் சந்தித்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் கல்விசாரா செயற்பாடுகளை மேம்படுத்துவற்கு எடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில், மெனிக்திவெல மத்திய கல்லூரி அதிபர் டபிள்யூ.எம்.ஆர்.எஸ். வீரசேகர ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.













# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையானோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றனர்

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவிப்பு



“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக தீர்மானித்துள்ளது, சுதந்திரக் கட்சியைப் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நிறைவேற்று சபையின் 90 வீதமானோரின் இணக்கப்பாட்டுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“போக்குவரத்துத் துறையினால் சுற்றுச்சூழல் கட்டமைப்புக்கு பல சேதங்கள் ஏற்படுகின்றன. அவற்றில் வாகனங்களில் இருந்து வெளிப்படும் புகை பிரதானமானது. இதற்கு தீர்வாக, புகை பரிசோதனைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அதன்படி, நாட்டின் வளிமண்டலத்தின் தரத்தை நல்ல நிலையில் பராமரிக்க முடிந்துள்ளது.

மேலும், போக்குவரத்து அமைச்சு, கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழு ஆகியவை இணைந்து அடுத்த 6 மாதங்களுக்குள் வளிமாசடைவதை அளவிடும் நிலையங்களின் எண்ணிக்கையை நூறாக உயர்த்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இந்தத் தரவுகள் அனைத்தையும் ஒரே இடத்திற்குக் கொண்டு வருவதற்கும், உலகில் எங்கிருந்தும் எந்தவொரு குடிமகனுக்கும் புகை உமிழ்வு நிலைமைகளை ஒன்லைனில் நேரடியாகப் பார்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், வாகன புகை உமிழ்வு சான்றிதழ் பெற்ற பின்னர் அதே இடத்தில் இருந்து காப்புறுதி மற்றும் வாகன அனுமதிப் பத்திரம் பெற தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நாடளாவிய ரீதியில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், வீதி விபத்துகளைக் குறைக்கும் வகையில், பொலிஸாரினால் வழங்கப்படும் புள்ளிவழங்கும் முறைமைக்குத் தேவையான தரவுக் கட்டமைப்பு மற்றும் பொலிஸாருக்கு வழங்க வேண்டிய உபகரணங்கள் பெறுவதற்கான கேள்வி மனு கோரும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளன. அடுத்த மாதத்திற்குள் பொருத்தமான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், சாரதிகளினால் மேற்கொள்ளப்படும் தவறுகளுக்கு அமைய புள்ளிகளை குறைக்க இருப்பதோடு அதனை நடைமுறைப்படுத்த முன்னர் செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு அறிவூட்டல் வாட்ஸ்அப் செய்திகள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களின் பின்னர் இது தொடர்பான சட்டம் செயற்படுத்தப்படும்.

அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக தீர்மானித்துள்ளது. அந்த தீர்மானத்தை எமது கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட கட்சியின் அதிகாரிகள் மட்டுமன்றி சு.கவை பிரதிநிதித்துவப்படுத்தி பொதுஜன பெரமுனவின் கீழ் நாடாளுமன்றத்திற்கு தெரிவான 14 உறுப்பினர்களில் 08 உறுப்பினர்கள் இந்த தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, அகில இலங்கை நிறைவேற்று சபையிலுள்ள 90 வீத உடன்பாட்டுடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலமான ஏற்பாட்டு வலையமைப்பு தற்போதே தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளது.” – என்றார்.

# தமிழகத்திலுள்ள இலங்கை சிங்களவர்களின் நிறுவனங்களை முற்றுகையிட்டுப் போராட்டம்

## மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களைக் கண்டித்து தமிழகத்தில் உள்ள இலங்கை சிங்கள முதலாளிகளின் நிறுவனங்கள் முற்றுகையிடப்படவுள்ளன என்று மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி தெரிவித்தார்.

கடந்த வாரம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் படகு மோதிய விபத்தில் உயிரிழந்த இராமேஸ்வரம் மீனவரின் இல்லத்துக்கு நேற்று சென்றபோதே ஊடகங்களிடம் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் தொடர்கதையாகவுள்ளது. இது மீனவன் மீதான தாக்குதல் அல்ல. தமிழன் மீதான தாக்குதல். இதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள இலங்கை சிங்களவர்களின் தொழிற்சாலைகள், தொழில் மையங்களை இலக்கு வைத்து முற்றுகைப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

இதன் முன்னோடியாக எதிர்வரும் 10 ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கையின் பிரபல தளபாட விற்பனை மையம் முற்றுகையிடப்படும்.” – என்றார்.

# காணி உரிமம் கொண்ட சிறுதோட்ட உரிமையாளர்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்களை மாற்றுவதே நோக்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

“வீட்டுக்கான காணி உரிமத்தைக் கொண்ட சிறுதோட்ட உரிமையாளர்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும். எமது அரசாங்கத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமங்களை வழங்குவதோடு பெருந்தோட்ட கிராமங்களும் உருவாக்கப்படும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் தேயிலைத் தொழிலாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“நமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எமது அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டத்தில், காணி உரிமை, தோட்டக் கிராமங்களை உருவாக்குதல் மற்றும் வீடுகள் மற்றும் காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் வழங்குதல் ஆகியவை தோட்டத் தொழிலாளர்களை முதன்மையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பற்றி எப்போதும் பேசுவதை விடுத்து, மலையக தோட்டச் சமூகத்தின் வேலையற்ற இளைஞர்களுக்கு நில உரிமை, மூலதன உரிமை, விவசாயம் செய்யும் உரிமையை வழங்குவதே எமது நோக்கமாகும். மேலும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளராக சமுதாயத்தில் உயர் நிலையைப் பிடித்து நமது நாட்டின் தேயிலை உற்பத்திக்கு பங்களிக்க வேண்டும்.



பயிரிடப்படாத தரிசு நிலம் இவர்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் தேசிய தேயிலை உற்பத்தியை உச்ச மட்டத்திற்கு கொண்டு வருவதுடன், சம்பள அடிப்படையில் தொழிலாளர் சமூக தரப்படுத்தலை மாற்றியமைத்து அவர்களுக்கும் சம உரிமை வழங்கப்படும். மேலும் அவர்கள் நில உரிமையாளர்களாக மாறுவதற்கான உரிமையும் உறுதிப்படுத்தப்படும். அத்துடன், ஒரு பிரஜை என்ற ரீதியில் ஒரு வீட்டில் காணிக்கான உரிமை இருக்க வேண்டும். அவ்வாறான அரச கொள்கையே நடைமுறைப்படுத்தப்படும்.”– என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமர்ப்பிக்கப்படும் சட்டமூலம். இரண்டாவது வாசிப்பில் நாடாளுமன்றம் அதை மேற்கொண்டு விவாதிக்க அங்கீகரிக்குமானால், சட்ட விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலையியல் குழுவுக்கு அது அனுப்பி வைக்கப்படும். அங்கு அது பரிசீலனை செய்யப்பட்டு, உரிய திருத்தங்களுக்கான பரிந்துரையோடு நாடாளுமன்றத்துக்கு மூன்றாவது வாசிப்புக்கு வரும்” என்றார் அவர்.

“நாளை (இன்று) சுமந்திரனின் இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது இரண்டாவது வாசிப்பில் அதன் மீது வாக்கெடுப்பு நடக்கும். யாரேனும் தரப்பு வாக்கெடுப்புக்குக் கோரினால் சபாநாயகர் வாக்கெடுப்புக்கு அனுமதிப்பார். சுமந்திரனின் இந்த மாகாண சபை தேர்தல் சட்ட மூலம் தமிழருக்கானது என்று கருதி விமல் வீரவன்ஸ, உதய கமன்பில்ல போன்றோர் வாக்கெடுப்புக்குக் கோரினால் சட்டமூலத்தில் மீதான வாக்கெடுப்பை சபாநாயகர் முன்னெடுப்பார். இல்லையாயின் குரல் அங்கீகாரம் மூலம் அது ஏற்றுக்கொள்ளப்படலாம்” – என்றார் அவர்.

“மாகாண சபைத் தேர்தல் சட்ட மூலத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதி மற்றும் மற்றைய கட்சிகளிடையே காணப்படுவதால் நாளை (இன்று) அது குரல் வாக்கெடுப்பு மூலமோ அல்லது இணக்கத்தின் அடிப்படையிலோ இரண்டாவது வாசிப்பில் வெற்றிகரமாக தாண்டும் என நம்பலாம். அதன் பின்னர் இந்தச் சட்ட மூலத்தின் அவசியம் – அவசரம் – கருதி சட்ட விடயங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலையியல் குழு அதை ஒரு வாரத்துக்குள் இறுதி செய்யப்பட்ட அங்கீகாரத்தோடு – பரிந்துரையோடு – நாடாளுமன்றத்திற்கு அதை அனுப்பி வைக்கும் என நம்பலாம்.” – என்றும் அவர் விளக்கினார்.

– இப்படி எல்லாம் எதிர்பார்க்கப்பட்ட படி நடந்தேறினால் ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைக்கான தேர்தல் நடப்பது உறுதியாகி விடும்.

\+ + +

மொட்டுக் கட்சியின் பெரும்பாலான எம்.பிக்கள் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தாலும் பல இளம் எம்.பிக்கள் – நாமல் ராஜபக்ஷவோடு நெருக்கமானவர்கள் – ரணில் பக்கம் சாயாமல் மொட்டுடன் உறுதியாக நிற்கின்றார்கள். அவர்கள் சிலர் இராஜாங்க அமைச்சர்கள்.

ரணில்பக்கம்சாயாவிட்டால்இராஜாங்க அமைச்சர் பதவியை துறவுங்கள் என்று அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தேர்தலுக்கு இன்னும் 45 நாள்கள் தான் உள்ளன. அதுவரை ஆடுவதை ஆடி முடிக்கட்டும் ஜனாதிபதி ரணில் தரப்பு என்று மொட்டுத்தலைமை பார்த்திருப்பதாகத் தகவல்.

## ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பிரதான அமைப்பாளரானார் உமாச்சந்திரா




ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பிரதான அமைப்பாளராக உமாச்சந்திரா பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்துக்கான ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக் கட்டமைப்பு தொடர்பான பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கான தலைமை மற்றும் பொறுப்பு உமாச்சந்திரா பிரகாஷ்க்கு வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்தஇரண்டுபேரில்ஒருவர்நேற்றுபொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், நேற்று மாலை வரையில் நடைபெற்ற பேச்சில் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

இந்தநிலையில், அடுத்த கூட்டத்தில் இந்தத் தெரிவை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான அறிவிப்பு நாளை புதன் கிழமை அல்லது வியாழக்கிழமை வெளியிடப்படும் என்று தெரியவருகின்றது.

நேற்றைய கூட்டத்தின்போது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், புளொட் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்ற முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டிருக்கவில்லை.

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு படகுகளில் தமிழகம் – தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் தெற்கு கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோதே இந்த 22 பேரும் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு படகுகளும் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டமீனவர்கள்மன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று மன்னார் மாவட்ட நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## நமது கருத்து

# சட்டமா அதிபரின் ஆலோசனை

பொலிஸ்மா அதிபர் நியமன சர்ச்சை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியஉத்தரவுக்கு அமைய செயல்படுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க வழிகாட்டுதல் வழங்கியிருக்கின்றார்.

தம் இஷ்டப்படி சட்டங்களுக்கு வியாக்கியானங்கள் செய்தபடி, அவற்றின் அடிப்படையில் இவ்விடயங்களில் குழப்பங்களை ஏற்படுத்தி நிற்கும் சபாநாயகர், தற்போது சட்டமா அதிபர் வழங்கியிருக்கும் இந்த ஆலோசனையை செவிமடுத்து நடப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்புக் கவுன்ஸிலின் தீர்மானத்தை சபாநாயகர் திரித்து அறிக்கையிட்டமையால், அதன் அடிப்படையில் தேசபந்து தென்னக்கோனுக்கு பொலிஸ்மா அதிபர் நியமனத்தை விழுந்தடித்து வழங்கி இருந்தார் ஜனாதிபதி. அது தவறானது எனத் தெரிவித்து ஒன்பது மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

அவற்றை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்றம் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகச் செயல்படுவதற்கும் இடைக்கால தடை விதித்தமையோடு வழக்கு முடியும் வரை ஒரு பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும்படியும் ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்திருந்தது.

ஆனால் அந்தப் பரிந்துரைப்படி ஒரு பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கின்றமையை விடுத்து, ஜனாதிபதி வேறு சட்ட வியாக்கியானங்கள் கூறி வருகின்றார். அதுபோலவே சபாநாயகரும் அரசமைப்புக்கு கவுன்ஸில் தீர்மானம் தொடர்பான தமது திரிப்பு உயர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் அம்பலப்படுத்தப்படலாம் என்ற அச்சத்தினாலோ என்னவோ தம் இஷ்டப்படி இவ்விடயத்தில் சட்ட வியாக்கியானங்கள் கூறி வருகின்றார்.

அரசமைப்பு கவுன்ஸில் நிறைவேற்றதிகாரத்திற்கு கீழ் வருவது, அதில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் சபாநாயகரோ அரசமைப்புக் கவுன்ஸில் நேரடியாக நாடாளுமன்றத்திற்குக் கீழ் வருகின்றது, அதனால் அதன் நடவடிக்கைகளில் உயர்நீதிமன்றம் தலையிட நியாயாதிக்கம் இல்லை என்கிறார்.

அதாவது, அரசமைப்பு கவுன்ஸிலின் பெயரால் தாங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்பது சபாநாயகரினதும், ஜனாதிபதியினதும் நிலைப்பாடு.

இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் அரசமைப்பு கவுன்ஸிலின் பெயரால் சபாநாயகரும் ஜனாதிபதியும் எடுக்கும் நடவடிக்கைகள் நீதியானவயா என்று ஆராய்ந்து உத்தரவிடும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்குக் கூட கிடையாது என்று தவறான சட்ட வியாக்கியானத்தை சபாநாயகரும் ஜனாதிபதியும் முன் வைக்க முயல்கின்றனர்.

அவர்களின் அந்த நிலைப்பாடு தவறானது. அடிப்படை உரிமை மனுவின் மூலம் இத்தகைய விடயங்களில் நீதி கோரும் உரித்து பொதுமக்களுக்கு உண்டு. அத்தகைய மனுக்களின் பெயரால் நீதி பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் உரித்தும் நியாயாதிக்கமும் உயர்நீதி மன்றத்துக்கு உள்ளது.

இவை விளங்காமல், அல்லது விளங்கியும் விளங்காத மாதிரி காட்டிக் கொண்டு, இவ்விடயங்களில் உருப்படாத அறிவிப்புகளை முன்வைக்கின்றனர் சபாநாயகரும் ஜனாதிபதியும்.

அந்த நிலைப்பாட்டையொட்டித்தான் ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் நாட்டின் அரசுக்கு சட்ட ஆலோசனை வழங்கும் சட்டமா அதிபர் இவ்விடயத்தில் சபாநாயகருக்கு உரிய ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளுக்கு அமைய செயல்படும்படி சபாநாயகருக்கு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியிருக்கின்றார். அதாவது உங்கள் இஷ்டப்படி சட்டத்தை வியாக்கியானம் செய்து, விடயங்களைக் குழப்பி அடிக்காமல், உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்துங்கள் என்பதுதான் சட்டமா அதிபரின் சட்ட ஆலோசனை. எப்போதுமே தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நினைத்துக் கொண்டு செயற்படும் ஜனாதிபதி மற்றும் சபாநாயகரின் காதில் சட்டமா அதிபரின் இந்த ஆலோசனை விழுமா? தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.



## வயநாடு மண்சரிவு:

# 29 உடல்களுக்கு ஒரே இடத்தில் இறுதிச் சடங்கு நடத்த ஏற்பாடு

இந்தியா கேரளா வயநாடு மண்சரிவில் சிக்கி உயிரிழந்த அடையாளம் தெரியாத 29 உடல்களுக்கு ஒரே இடத்தில் இறுதிச் சடங்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட மண்சரிவு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், கடந்த ஆறு நாட்களாக நடந்த மீட்புப் பணிகளில், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, 206 பேர் காணாமல் போயுள்ளதுடன், அவர்களை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் 219 உடல்களும், 143 உடல் பாகங்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும், 80 இக்கும் மேற்பட்ட உடல்கள் அடையாளம் காணப்படவில்லை எனவும், அடையாளம் காண முடியாத உடல்களுக்கு அரசு சார்பில் இறுதிச் சடங்கு செய்யப்பட்டு, அடக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த உடல்களை வயநாட்டின் புதுமலை பகுதியில் அடக்கம் செய்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், அங்கு கடந்த இரண்டு நாள்களில், அடையாளம் தெரியாத ஆறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாதிவாரி கணக்கெடுப்பு விவகாரம் ராகுலை விமர்சித்த கங்கனா ரனாவத்



சாதிவாரி கணக்கெடுப்பு விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியை கங்கனா ரனாவத், ‘மார்பிங்’ புகைப்படம் மூலம் விமர்சனம் செய்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி மக்களவையில், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கும் பா.ஜ.கவின் எம்.பி. அனுராக் தாக்குருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. அப்போது தேசிய அளவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

அனுராக் தாக்குர் கூறும்போது, “சாதி தெரியாதவர்கள், சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து பேசுகிறார்கள்” என்று தெரிவித்தார்.

இதுகுறித்து பின்னர் விளக்கம் அளித்த அனுராக் தாக்குர், “நான் யாரையும் குறிப்பிட்டு பேசவில்லை. பொதுவான அடிப்படையில் கருத்தை கூறினேன்” என்றார்.

இந்த விவகாரம் தொடர்பாக அசாம் முதல்வரும் பா.ஜ.க. மூத்த தலைவருமான ஹிமந்த பிஸ்வா சர்மா சமூக வலைதளத்தில் அண்மையில் வெளியிட்ட பதிவில், “சாதியை பற்றி கேட்காமல் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை ராகுல் காந்தி நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்” என்று விமர்சித்தார்.

இதே விவகாரம் தொடர்பாக பா.ஜ.க. எம்.பியும் நடிகையுமான கங்கனா ரனாவத் அண்மையில் வெளியிட்ட பதிவில்,

“ராகுலுக்கு அவருடைய சாதி தெரியாது. அவரது தாத்தா முஸ்லிம். பாட்டி பார்சி, அம்மா கிறிஸ்தவர். ஆனால் அவர் அனைவரின் சாதியை அறிந்து கொள்ள விரும்புகிறார்” என்று குற்றம் சாட்டினார்.

இந்த சூழலில் கங்கனா ரனாவத் தனது சமூக வலைதளத்தில் ராகுல் காந்தியின் ‘மார்பிங்’ புகைப்படத்தை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

அந்த புகைப்படத்தில், ராகுல் காந்திக்கு குல்லா அணிவிக்கப்பட்டு, நெற்றியில் மஞ்சள், குங்குமம் பூசி, கழுத்தில் சிலுவை தொங்கவிடப்பட்டு இருக்கிறது. புகைப்படத்தின் அடிக்குறிப்பில், “சாதியின் பெயரைக் கேட்காமல் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த இவர் விரும்புகிறார்” என்று கூறப்பட்டு உள்ளது.





# பிரதமர் அலுவலகத்தினுள் புகுந்த போராட்டகாரர்கள்

## பங்களாதேஷில் பெரும் பதற்றம்

பங்களாதேஷில் வன்முறை வெடித்துள்ளதை தொடர்ந்து, போராட்டக்காரர்கள் அந்நாட்டு பிரதமர் அலுவலகத்தினுள் சென்று புகைப்படம் எடுத்துள்ள காணொலி வெளியாகியுள்ளது.

பங்களாதேஷில் ஆளும் அவாமி லீக் அரசுக்கு எதிரான போராட்டம் கடந்த சில நாள்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கடந்த ஒரு மாதத்தில் போராட்டத்திற்கு 300 பேர் பலியான நிலையில், நேற்று முன்தினம் நடந்த புதிய கலவரத்தில் 100 பேர் வரை உயிரிழந்துடன் பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்றும் அந்நாட்டின் வன்முறை வெடித்து பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்த பதவி விலகிய பிரதமர் அந்நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், போராட்டக்காரர்கள் அந்நாட்டு பிரதமர் அலுவலகத்தினுள் நேற்று புகுந்து அங்குள்ள நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

ஒரு சிலர் மேசை மீது ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளதோடு சிலர் தொலைபேசியில் செல்பி புகைப்படம் எடுத்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் உள்ளே இருந்தவர்களில் சிலர் பொருட்களை எரித்ததில், அந்த பகுதி முழுவதும் புகை பரவியுள்ளது.

சிலர் கைத்தட்டியும், வெற்றி முழக்கங்களை எழுப்பியும், மேசை மீது நடந்து சென்றும், குதித்தபடியும் காணப்படுகின்றமை காணொலியில் காணகூடியதாக உள்ளது.

இதேவேளை, பங்களாதேஷில் உள்ள டாக்கா சர்வதேச விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தவகையில், குறித்த விமான நிலையம் ஆறு மணி நேரம் மூடப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் இராணுவம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி▼















# பிரதமர் அலுவலகத்தினுள் புகுந்த போராட்டகாரர்கள்

## பங்களாதேஷில் பெரும் பதற்றம்

தொடர்ச்சி▲

டாக்காவில் ஏற்பட்ட அமைதியின்மையே இந்த நடவடிக்கைக்கு காரணம் என தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக அந்நாட்டிற்கு வரும் சில விமானங்கள் இந்தியாவுக்கு திருப்பி விடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், நேற்று முன்தினம் முதல் நாடு தழுவிய ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் நாட்டின் பெரிய ஆடைத் தொழில்சாலைகளும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், பங்காளதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளதுடன் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மாணவர்கள் போராட்டத்துக்கு மதிப்பளித்து பிரதமர் ஷேக் ஹசீனா உடனடியாக தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என அந்நாட்டு இராணுவம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளதுடன், நாட்டிலிருந்து தனது சகோதரியுடன் வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்ற

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறியும், அந்நாட்டில் வன்முறை தொடர்கிறது.

இந்த நிலையில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஷ்ரப் பின் மோர்டாசாவின் வீட்டிற்கு போராட்டக்காரர்கள் தீ வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் 117 கிரிக்கெட் போட்டிகளில் தலைமை தாங்கியுள்ள இவர், கடந்த 2018 ஆம் ஆண்டு அரிசயலில் களமிறங்கினார்.

ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சியில் இணைந்து அரசியல் பயணத்தை தொடங்கிய மோர்டாசா, 2018 இல் நரைல்-2 தொகுதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதேவேளை, இந்த ஆண்டு தொடக்கத்தில் பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வேட்பாளராகப்போட்டியிட்டு, அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, நரைல்-2 தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன் படி, பங்களாதேஷில் வெடித்த பாரிய மாணவர் போராட்டங்களைத் தொடர்ந்து ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் மோர்டாசாவின் வீட்டை நாசம் செய்த வன்முறையாளர்கள், அதற்கு தீ வைத்துள்ளனர்.

மாணவர்களின் போராட்டம் காரணமாக நாட்டை விட்டு தப்பிச் சென்ற பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா லண்டன் செல்லவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ உலங்கு வானூர்தியில் தப்பிச் சென்ற அவர் இந்தியாவின் அகர்தலாவை அடைந்துள்ளார் என ஊடகங்கள் தெரிவித்தன. இவர் அங்கிருந்து லண்டன் செல்லவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.








# மன்னார் ஆஸ்பத்திரியில் உயிரிழந்த பெண் விசாரணையின் பின்னர் உரிய நடவடிக்கை!

## வைத்தியசாலைப் பணிப்பாளர் உறுதியளிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த இளம் குடும்பப் பெண் மரணம் தொடர்பில் விசாரணைகளின் பின்னர் உரிய தரப்பினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம். ஹனீபா உறுதியளித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 27 ஆம் திகதி உயிரிழந்த இளம் குடும்பப் பெண் மரணம் தொடர்பாக பல்வேறு கட்ட விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முடிவடைந்த நிலையில் உரிய தரப்பினருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 27 ஆம் திகதி பட்டதாரி இளம் குடும்ப பெண் திருமதி மரியராஜ் சிந்துஜா (வயது-27) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் வன்மையான கண்டனங்கள் முன் வைக்கப்பட்டது.

இந்தப் பெண்ணின் மரணம் சம்பவதினம் நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்கள் அசட்டை காரணமாக இடம் பெற்றுள்ளது என்று பெண்ணின் குடும்பத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மரணம் தொடர்பில் நீதியான விசாரணைகள் இடம் பெற்று உரிய வைத்தியர் மற்றும் கடமையில் இருந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன.

இந்த நிலையில் ஞாயிற்றுக் கிழமை மாலை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்று வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்களுடன் இணைந்து கலந்துரையாடலை மேற்கொண்டார். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் டானியல் வசந்தன் கலந்து கொண்டிருந்தார்.

பெண்ணின் மரணம் குறித்து நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் உரிய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து மக்கள் மத்தியில் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை மீது உள்ள அவநம்பிக்கை தகர்த்தெரியப்பட வேண்டும் என்றும் கோரிக்கையை முன் வைத்தார்.

# ஒஸ்மானியா பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒஸ்மானியா கல்லூரியின் வைர விழாவை முன்னிட்டும், பழைய மாணவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகது ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மஹ்மூத் மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பழைய மாணவர்களும் அழைக்கப்படுகின்றீர்கள். புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவுள்ளது என்று ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் என்.எம்.சாபி தெரிவித்தார்.

# சிவபூமி பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி

சிவபூமி பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் கோண்டாவிலில் அமைந்துள்ள பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ம.இளம்பிறையன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினராக லண்டனைச் சேர்ந்த தொழிலதிபர் ஜெயசீலன் தாட்சாயினி தம்பதியினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.



# மரக்கறிச் செய்கையாளர்களுக்கு இலவச உரம் வழங்க நடவடிக்கை

மூன்று மாவட்டங்களை சேர்ந்த மரக்கறி செய்கையாளர்களுக்காக இலவசமாக உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குருணாகல், மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய 3 மாவட்டங்களிலுள்ள 3,476 விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கப்படவுள்ளது.

கட்டார் நிறுவனமொன்றினால் இந்த இலவச உரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கசிப்புக் காய்ச்சும் நிலையம் மானிப்பாயில் மடக்கப்பட்டது



யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டமையுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் நேற்று முன்தினம் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியானவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தமிழ்ப் பொதுவேட்பாளர் திட்டத்துக்கு ரெலோவின் விநோ எம்.பி. ஆதரவில்லை!

## வன்னி மக்களின் மனங்களை அறிந்தே இந்த முடிவு என்கிறார் அவர்

(கே.வசந்தன்)



**தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ரெலோ ஆதரவு வழங்கினாலும் எனது ஆதரவு இலலை. வன்னி மக்களின் மனங்களை அறிந்தே இந்த முடிவு என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

**தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் இன்று எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்-**

ரெலோ கட்சி பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் அதற்கு நான் உடன்பாடில்லை. அது ஒரு விஷப் பரீட்சை. நான் வன்னி மக்களின் கருத்துகளை கேட்டறிந்துள்ளேன். அவர்களது நிலைப்பாடுதான் எனது நிலைப்பாடும். பொது வேட்பாளருக்கு வன்னியில் ஆதரவு இல்லை.

பொதுவேட்பாளர் என்ற ஒன்று வெல்லப்போவதில்லை. சமஷ்டி உள்ளிட்ட தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னிறுத்திப் பொது வேட்பாளரை நிறுத்துகிறார்கள். ஆனால் அவர் குறைந்த வாக்குகளை பெறுகின்ற போது மக்களது அபிலாசைகளுக்கு தமிழ் மக்களது அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி போன்ற தமிழ் தேசிய கட்சிகளும் இந்த கூட்டணியுடன் இணைந்து அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளும் பொது வேட்பாளரை நிறுத்தி செயற்பட்டால் அதற்கு எனது ஆதரவு உண்டு. அப்போது தான் மக்கள் அதனை ஆதரிப்பார்கள். ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னனி பகிஷ்கரிக்கிறது. தமிழரசுக் கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு இல்லை. இதனால் தமிழ் வாக்குகள் சிதறும். சொற்பவாக்குகளையே பொது வேட்பாளர் பெறுவார். இது பாதிப்பை ஏற்படுத்தும்.

பொது வேட்பாளர் தெரிவில் 7 கட்சிகளும் 7 பொது அமைப்புக்களும் இருக்கிறார்கள். ஆனால் அந்த கட்சிகளிடமோ அல்லது அந்த அமைப்புக்களிடமோ பொது வேட்பாளராக போடுவதற்கு ஆள்கள் இல்லை. பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்காத தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சட்டத்தரணி கே.வி தவராசா மற்றும் அக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் ஆகியோரில் ஒருவரது பெயரை பரிசீலிக்கிறார்கள். அவர்களிடம் வேட்பாளர் இல்லாது பொது வேட்பாளரை எதிர்க்கும் கட்சியிடம் வேட்பாளரை தேடும் நிலை என்றால் சிந்திக்க வேண்டும். – என தெரிவித்தார்.



# சமனல வாவியில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு!

பலாங்கொடை – சமனல வாவியில் நீராடச் சென்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நண்பர்கள் சிலருடன் நேற்று முன்தினம் நீராடச்சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

வென்னப்புவயை சேர்ந்த 29 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பலாங்கொடை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் மா அதிபர் விவகாரம்:

# நீதிமன்ற உத்தரவிற்கமைய செயற்படுமாறு சட்ட மா அதிபர் சபாநாயகருக்கு அறிவிப்பு



பொலிஸ் மாஅதிபர் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கமைய செயற்படுமாறு சட்ட மா அதிபர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சட்ட மா அதிபரின் ஆலோசனை கோரி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் சட்ட மா அதிபர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இந்த விடயம் குறித்து செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

சபாநாயகரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீண்ட ஆலோசனை அறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்ட மாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடுவதற்கு எவ்வித சட்ட அடிப்படைகளும் இல்லை என சபாநாயகர் கூறியுள்ளார்.

பொலிஸ் மாஅதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமையைச் சவாலுக்குட்படுத்தி, சிவில் தரப்பினர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம், அவர் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது.

அத்துடன் அரசமைப்பிற்கமைய, பதில் பொலிஸ் மாஅதிபரை நியமிக்குமாறு உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியது.

எவ்வாறாயினும், பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி தீர்வு காண வேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களுக்கான கால அவகாசம் நீடிப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் ஓகஸ்ட் 9 ஆம் திகதி நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தலை முன்னிட்டு இதுவரை 17 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

19 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 07 சுயேச்சை வேட்பாளர்களும் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணி முதல் முற்பகல் 11.30 வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, www.elections.gov.lk எனும் இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் ஊடாக வாக்களிக்க தகுதிபெற்றுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தத் தளத்தில் வாக்காளர் பதிவுத் தகவல் என்பதை தெரிவு செய்து தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் மாவட்டத்தை பதிவு செய்து உறுதிப்படுத்தலாமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.




# ஒலிம்பிக்கில் முதல் இலங்கையராக வரலாறு படைத்தார் அருண தர்ஷன




ஒலிம்பிக் வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்கிய இலங்கையராக அருண தர்ஷன பதிவாகியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டி ன்றில் ஆடவருக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் அரையிறுதி சுற்றுக்கு தகுதிபெற்ற முதல் இலங்கையர் எனும் மைல்கல் சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார். பாரிஸ் ஒலிம்பிக் விழாவில் அவர் இந்த மகத்தான ஆற்றலை வெளிப்படுத்தினார்.

ஆடவருக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் முதல் சுற்றுப் போட்டியில் அருண தர்ஷன மூன்றாமிடத்தைப் பிடித்தார்.

போட்டியைப் பூர்த்திசெய்ய அவருக்கு 44.99 செக்கன்கள் சென்றன. இதன் மூலம் அரை இறுதி சுற்றுக்கு தகுதிபெற்றார்.

இது 400 மீற்றர் ஓட்டத்தில் அவரது அதி சிறந்த காலப்பெறுதியாகும். திருகோணமலை சேருநுவர தெஹிவத்த கிராமத்தில் பிறந்த அருண தர்ஷன மாத்தளை அக்குரம்பட வீர கெப்பெட்டிபொல தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். அருணவின் ஆற்றலால் பேராந்தமடைந்த அவரது பயிற்றுநரான அசங்க ராஜகருணா அருணவை கட்டித்தழுவி ஆனந்த கண்ணீருடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

அருண தர்ஷன பங்கேற்கும் 400 மீற்றர் அரையிறுதிப் போட்டி இலங்கை நேரப்படி இன்று இரவு 11.05 அளவில் நடைபெறவுள்ளது.

# தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரை 60 முறைப்பாடுகள் பதிவு

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் 60 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனப் பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

அரச அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் என என அதன் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக சில அரச நிறுவனங்களின் சிரேஷ்ட பதவி நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியமை, பூரணப்படுத்தப்படாத அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல், பொருளாதாரம் மற்றும் கலாசார உறவுகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 06.08.2024




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு, செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். ஓய்வெடுக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டுக்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்துக்காகச் செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம். இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பத்தை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற்றியை பெற்றுத் தரும்.

உங்கள் தாயின் உடல் நலம் பற்றிய கவலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.08.2024




இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் இன்று நீங்கள் துடிப்புடன் உற்சாகமாக இருப்பீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும். இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park